இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,421, JANUARY 20, 1911.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Notification of By-laws framed by the Sanitary Board, Kandy.]

"1892 ம் வருஷம் முதல் 1909 ம் வருஷம் வரையுமுள்ள சிறு பட்டணச் சவுக்கியாதாரச் சட்டங்கள்."

இதனாற் சகலரும் அறியும்படி விளம்பரப்படுத்துவதாவது: மேற்சொன்ன சட்டங்களின் 9 E ம் பிரிவின் (2) (f) ம் கீழ்ப்பிரிவின்படியே; மத்திய மாகாணத்துக் கண்டிப்பகுதியின் சவுக்கிய சங்கத்தார், ஆனவர், நட்டம் அல்லது தீங்கு விளைவிக்கும் தொழில் வியாபாரங்களை ஒழுங்குபடுத்துவதற்காக இதனோடிணைத்த அட்டவணையிற் காட்டிய ஒழுங்குப் பிரமாணங்களை உண்டாக்கியிருக்கிறார் என்பதாம்.

அதிஉத்தம தேசாதிபதி யவர்களுடைய கட்டளைப்படி,

இராசாங்க லிகிதர் கந்தோர்,
கொழும்பு, 1911 ம் ஆடு ஜனவரிமீ 18 ந உ.

எச். எல். கிறவ்பொர்டு,
இராசாங்க லிகிதரின் வேலைபார்ப்பவர்.

குறிக்கப்பட்ட துணைப்பிரமாணங்கள்.

நட்டம் அல்லது தீங்கு விளைவிக்கும் வியாபாரம்.

1. மாத்தளை லோக்கல்போட் எல்லைக்குள் விஷ அல்லது கெட்ட நாற்றம் வரும் அல்லது எப்போவாகுதல் வரக்கூடிய எச்சம் எலும்புத்தூள் எரு முதலிய எந்தச் சாமானையும் விற்பனவுக்காக அல்லது சொந்தப்பாவிப்புக்காக ஒருவரும் வைத்திருக்கவும் கூடாது வைப்பிககவும் கூடாது. மேலும் சுண்ணும்பு செங்கல் உண்டாக்கும் இடம் அல்லது தோல் பதனிடுஞ்சாலை ஸ்தாபிக்கவுங் கூடாது. இப்படிச் செய்யவேண்டுமாகில் இத்துடன் அணைத்திருக்கும் A என்னு மட்சரமிட்ட அட்டவணைப்படி அக்கிராசனரிட முத்தரவுபெற்று வத்தைகாமம், புசலாவை, நோர்வூட், போகவந்தளாவை, மஸ்கேலியா, கடுகணுவை, தெளிதெனை, மயிலாப்பிட்டி, கலகா, குறுகங்கா, உளப்பனை என்னும் சுகாதார நகரஎல்லைக்குள் வைத்திருக்கவேண்டும். இவ்வுத்தரவுப்பத்திரம் வாங்கிய திகதி தொடக்கம் பின்வரும் மார்கழிமாதம் 31 ந் திகதி வரையும் பெலமுள்ளதாயிருக்கும்.

2. சுண்ணும்பு அல்லது செங்கற்சூளையில் தோல்பதனிடுமிடத்தில் அல்லது கெட்ட விஷ நாற்றம் உண்டாகும் அல்லது எப்பொழுதாவது உண்டாகக்கூடிய ஏதும் தீங்குவிளைவிக்கும் அல்லது நெருப்புப்பற்றக்கூடிய சாமான்களை வைத்திருக்கும் கடையில் நடத்தும் வியாபாரத்தின் ஒழுங்கு முறையை அக்கிராசனர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராகுதல் சோதனைபண்ண உத்தரவுண்டு.

3. மேற்சொல்லிய பிரகாரம் உத்தரவுபெற்ற ஒவ்வொரு வியாபாரியும் உத்தரவு நடைபெறுங் காலத்தில் அக்கிராசனரால் குறித்த விஷ பதார்த்தங்களை உண்டாக்க கொண்டுபோகக் குவித்துவைக்க அல்லது அவைகளின் தன்மையைச் சோதிக்க உண்டாக்கப்படும் கட்டளைகளுக்கு அமைந்து நடக்க வேண்டும்.

---

A. அட்டவணை.

———— இருக்கும் ———— ம் இலக்க வீட்டில் ———— ஸ்தாபிக்க இத்தால் உத்தரவு கொடுக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு முன் தடைபண்ணப்படாவிட்டால் 19 — ம் ஆடு மார்கழிமீ 31 ந் திகதி வரையும் பெலமுள்ளதாயிருக்கும்.

———

சுகாதார சங்கத்தலைவர்.

---

## LAND SALES.

காணி விற்பனவுகள்.

**No. 621, N. P.**—1911 ம் ஆண்டு மாசிமாதம் 22 ந் திகதி, வவுனியாவில், தன் ஆபிசில், வடமாகாணத்து முல்லைத்தீவு கவண்மேந்து உதவி ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது ஆட்சி பெலப்பிக்கப்படும். 14 காணித்துண்டுகள், வடமாகாணத்து முல்லைத்தீவு டிஸ்திறிக்கின் வவுனியா தெற்குத் தமிழ் பகுதியிலும் சிங்களப்பகுதியிலு மிருக்கின்றது.

பிளான் இலக்கம் 3,651. தவசியாகுளம். உரித்தாளி—முடி.

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. று. ப. | ஏக்கரொன்றின் தரிப்புவிலை ரு. |
|---|---|---|---|---|---|
| 72 | கீன்காட்டு நிலம் | க. கயிலாயபிள்ளை | நெல்லுக்கேற்றகாடு | 2 0 18 | 17·50* |

* இத்துண்டுகளில் விலைபெற்ற சாதிமரங்கள் உண்டு.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. றூ. ப. | ஏக்கரொன்றின் தரிப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|
| | | பிளான் இலக்கம் 3,653. வண்ணான்புளியங்குளம். | | | |
| 77 | வீரையடியில்காடு | வேலன் ஐயன் | நெல்லுக்கேற்றகாடு | 2 1 15 | 17·50* |
| 78 | கீள்காட்டு நிலம் | முருகன் வேலன் | ஷை | 3 3 25 | 16* |
| | | பிளான் இலக்கம் 3,658. பனிச்சைக்குளம். | | | |
| 89 | யீரர்காட்டுநிலம் | ச. சின்னப்புவும் மறுவும் | குடியிருக்கக்கூடிய நிலம் | 2 0 22 | 20 |
| | | பிளான் இல்க்கம் 3,647. ஈறட்பெரியகுளம். | | | |
| 51 | வாபடகலே | க. நயிந்துருளேயும் மறுவும் | நெல்லுக்கேற்றகாடு | 1 1 23 | 20 |
| | | பிளான் இலக்கம் 3,648. ஈறற்பெரியகுளம். | | | |
| 55 | கொறெுவ்அலலங்க வத்த | — | றெயில்ரேுட்டுக்கு விடப்பட்ட நிலம் | 0 2 33 | — |
| 56 | ஷை | — | பாதைக்கு விடப்பட்ட நிலம் | 0 0 19 | — |
| 57 | ஷை | கே. கபுருளேகோருளே | தோட்டத்திற்கேற்ற நிலம் | 11 3 19 | 23* |
| 58 | ஷை | — | ஆற்றுக்குவிடப்பட்ட நிலம் | 1 1 18 | — |
| 59 | ஷை | — | ரேுட்டுக்கு விடப்பட்ட நிலம் | 0 1 12 | — |
| 60 | கொறெுவ்அவேத்த | — | ஷை | 0 0 33 | — |
| 61 | ஷை | சீருளேகே கதிராதே | தோட்டத்திற்கேற்ற நிலம் | 4 2 11 | 23* |
| 62 | ஷை | — | ஆற்றுக்கு விடப்பட்ட நிலம் | 0 0 27 | — |
| | | பிளான் இலக்கம் 3,692. மாமடு. உரித்தாளி—டீ. வண்ணிகாமி நிஜிஸ்திருரும் மறுவும். | | | |
| O 3 | சியம்பலாகாவத்த | — | தோட்டம் | 0 2 12 | 4·50† |

* இத்துண்டுகளில் விலைபெற்ற சாதிமரங்கள் உண்டு.

† முளுச்சலாரும் எல்லை அடையாளச் சலாரும் இந்தக் காணியை உரித்தாளிகளுக்கு ஆட்சிபெலப்பித்துக் கொடுக்கப்படும்.

இந்தக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் முல்லைத்தீவு அரசாட்சி உதவி ஏசன்றுத்துரையிடத்திலும், படங்களைப்பற்றி சர்வேயர் ஜெனருல்துரையவர்களிடத்திலும் கேட்டறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1911 ம் ௵ தைமீ 5 ௳. எச். எல். கிருவ்போர்டு,
கலோனியல் சக்கிறுத்தாரின் வேலைபார்ப்பவர்.

---

**No. 622, N. P.**—1911 ம் ஆண்டு மாசிமீ 21 ௳ திகதி, செவ்வாய்க்கிழமை காலமே 11 மணியளவில், தன் ஆபீசில் வட மாகாணத்து கவண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் விற்கப்படும் அல்லது உரித்து முடிவுசெய்யப்படும். 12 காணித்துண்டுகள், வட மாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் பச்சிலைப்பளி, வடமருட்சி மேற்குப் பகுதியிலிருக்கின்றது.

| காணித் துண்டின் இல. | குறிச்சி. | உரித்தாளியின் பெயர் | விபரம். | விசாலம். ஏ. றூ. ப. | ஏக்கரொன்றின் தரிப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|
| | | பிளான் இலக்கம் 3,588. கேள்விக்காரன்—இல்லை. | | | |
| 13361 | புலோப்பளை | தொம்மை இறப்பியல் | தென்னந்தோட்டம் | 0 1 3 | 50 |
| | | பிளான் இலக்கம் 3,589. கேள்விக்காரன்—இல்லை. | | | |
| 13364 | புலோப்பளை | அரசாட்சி | புகையிலைக்குத்தக்க | 0 3 19 | 15 |
| | | பிளான் இலக்கம் 3,5 2. கேள்ளிவிச்காரன்—இல்லை. | | | |
| 13224 | கிளாலி | தொம்மை இஸ்தாக்கி இரண்டு சிறு பிள்ளைகளுக்காக | தென்னந்தோட்டம் | 2 1 3 | 45 |
| 13225 | ஷை | சின்னத்தம்பி தம்பு | பனங்காணி | 1 2 11 | 27 |
| 13226 | ஷை | முருகன் கணபதி | ஷை | 1 1 1 | 20 |
| 13227 | ஷை | கே. ஆறுமுகமும் மறுபேரும் | ஒரு பகுதி புகையிலை மற்றப் பகுதி பனை | 2 1 4 | 17·50 |
| 13228 | ஷை | தாவீது தொம்மை | பனைகள் | 0 2 33 | 25 |
| 13229 | ஷை | கே. நன்னி | தென்னந்தோட்டம் | 0 1 26 | 45 |
| 13230 | ஷை | — | ரேுட்டுக்கருகாண்மையாக விடப்பட்ட நிலம் | 0 0 13 | — |
| 13231 | ஷை | — | ஒழுங்கைக்காக விடப்பட்ட நிலம்* | 0 3 8 | — |
| | | ஒடுக்குப்பணம் கட்டத்தவறிய நிலங்கள். பிளான் இலக்கம் 3,600. கேள்விக்காரன்—வல்லிபுரனுதர் தம்பையாவும் மறுபேரும் முன்வாங்கிய நிலம். | | | |
| 13396 | துன்னாலை | — | தரிசுநிலம் | 15 3 29 | 15 |
| 13400 | ஷை | — | வல்லிபுரனுதரும் மறுபேரும் கூட்டிச்சேர்த்தது | 3 0 20 | 30 |

* ஒடுக்குப்பணம் கட்டத்தவறிய காணிகளுக்கு விற்பனவுத் திகதிக்குமுன் கட்டவேண்டியகாசை வட்டியுடன் கட்டினுல் விற்பனவு நிறுத்தப்படும்.

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் வடமாகாணத்து கவுண்மேந்து ஏசன்றரிடத்திலும், படங்களைப்பற்றி அளவுகந்தோர் தலைவரிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

கலோனியல் சக்கிறுத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1911 ம் ௵ தைமீ 5 ௳. எச். எல். கிருவ்பொர்டு,
கலோனியல் சக்கிறுத்தாரின் வேலைபார்ப்பவர்.

[Postponement of Land Sale at Trincomalee Kachcheri.]

1910 ம் ஞூ மார்கழிமீ 15 ந் திகதிக்கு திரிகோணமலைக் கச்சேரியில் நடைபெற நியமித்திருந்த காணி விற்பனவு 1911 ம் ஞூ மாசிமீ 23 ந் திகதி வியாளக்கிழமை நடைபெறுமென் றித்தாலறிவிக்கப்படுகிறது.

கொழும்பு, இராசாங்க லிகிதர் கந்தோர்,
1911 ம் ஞூ ஜனவரிமீ 12 ந் உ.

எச். எல். கிறுபோர்ட்டு,
இராசாங்க லிகிதரின் வேலைபார்ப்பவர்.

---

## LAND ACQUISITION NOTICES.

### அரசாட்சியாரின் தேள்ளவைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Nuwara Eliya Town.]

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கிறுன்ற் கோற்றேல் றேட்டுக்குப் போகும் பாதையையும் முடக்கையும் விசாலிக்கிறதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 6,084. நுவரெலியாப் பட்டணம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| K 9 | "ஸ்கான்டல் கோணர்" | சமபூமி | மெஸ் றபேட்ஸ் என்பவரின் மனைவி | 0 0 4·75 |
| L 9 | ஷை | ஷை | கிறுன்ட் கோற்றேல் சொந்தக்காரர் | 0 0 2·50 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின் படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1911 ம் ஞூ பெபுருவரிமாசம் 24 ந் தேதியிலன்று 1 மணிக்கு நுவரெலியாக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நுவரெலியாக் கச்சேரி,
1911 ம் ஞூ தைமீ 10 ந் உ.

ஆர். ஏ. ஜி. பெஸ்டிங்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

[Kaduwamadu , Batticaloa District.]

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மதுருஓயாவிலிருந்து ஏறுவூருக்குப் போகும் றேட்டில் கூலிகள் இருப்பிடங் கட்டுதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 4,221. குறிச்சி—கொடுவாமடு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| S | பனங்காடு | புரன்பூமி | ஆறுமுகம் ஓவசியர் | 1 0 13·25 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1911 ம் ஞூ மாசிமாதம் 14 ந் தேதியிலன்று 1 மணிக்கு மட்டுக்களப்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டுக்களப்புக் கச்சேரி,
1911 ம் ஞூ தைமீ 10 ந் உ.

ஜே. ஓ. கே. மொர்ட்டி,
அரசாட்சி ஏசண்டு.

---

[Ulapane, Kandy District.]

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கம்பளை நாவலப்பிட்டி றோட்டும் உளப்பனை றிவர்சயிட் றோட்டும் சந்திக்கிற இடத்தில் கூலி லாயங்கள் கட்டுகிறதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 6,085. குறிச்சி—உளப்பனை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| M 9 | பொகல அல்லது அங்குறுப்பிற்றியாகேன | வெளி | டீ. பீ. டீ. ஆர் நாணயக்காரவும் டொன் கொர்னீலிஸ் நாணயக்காரவும் | 0 0 12·25 |
| N 9 | பொகலதோட்டம் | தேயிலை | உளப்பனை மகாதேவாலே | 0 0 12·25 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1911 ம் ஞூ மாசிமாசம் 22 ந் தேதியிலன்று 2 மணிக்கு உளப்பனை பகிரங்க வேலைப்பகுதி வங்களாவில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1911 ம் ஞூ தைமீ 16 ந் உ.

எல். டபிள்யு. பூத்,
அரசாட்சி ஏசண்டு.

[Wattegama, Kandy District.]

1876 ம் ஆம்-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மருந்துச்சாப்பும் மருந்துகலப்பவர் இருக்க வீடும் கட்டுகிறதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 6,041. குறிச்சி—வத்தகாமம்.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| M 4 | — | பொலிஸ் கோடு | மாகாண ரேட்டுச்சங்கம் | 0 0 21·75 |
| N 4 | — | வாடிவீடு | ஷை | 0 1 12 |
| O 4 | மெடவத்த | ஒரு வீடுஇருக்கிறது | ஜே. டபிள்யு. ஜானிஸ்பாஸ் | 0 0 38 |
| P 4 | ஷை | தென்னந்தோட்டம் | ஷை | 0 0 19·75 |
| Q 4 | கமவளவுவத்த | ஷை | ரிக்கிரிகுமாரிகாமி | 0 0 10·50 |
| R 4 | மாத்தலவேகெதறவத்த | ஷை | பீ. சமிச்சியப்பு | 0 0 1[illegible] |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆம்-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஏற்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1911 ம் ஆம் மாசிமீ 14 ந் தேதியிலன்று 2 மணிக்கு கண்டி கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தந்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டி கச்சேரி,
1911 ம் ஆம் தைமீ 16 ந் உ.

எல். டபிள்யு. பூத்,
அரசாட்சி ஏசண்டு.

---

## PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

### உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[Hambantota Notice No. 3,966.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உருத்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1911 ம் ஆம் (ஜனவரி) தைமீ 20 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எச். ஓ. பொக்ஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எச். ஓ. பொக்ஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திறிக்குக் கிறுவாப்பத்துக் கிழக்கைச்சேர்ந்த கஹுவகஸ்யாய என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

பிரதமபடம் 405.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 .. | குருந்துகல்கொடமூக்கலான .. .. .. .. | 4 1 34 |
| 2 .. | பின்னகெற்றிஆறேகேனை, புஸ்வெல்மடித்தேகேனை, பெனிகொமேகேனை, கிறுவகேதேனியேகேனை, றுப்பேகேனை, கல்வலஆறேகேன்யாய, கந்தஅத்தறகேனை, போககேனை .. .. .. .. | 301 1 13 |
| 3 .. | புஸ்வெல்மடித்தேகேனேகால்ல ... .. .. .. | 0 0 39 |
| | | 306 0 6 |

எல்லைகளாவன: வடக்கு-தளாவக் கிராம எல்லை, தெபொக்காவக் கிராம எல்லை; கிழக்கு-தெபொக்காவக் கிராம எல்லை, கோணதெனியக் கிராம எல்லை; தெற்கு-கோணதேனியக் கிராம எல்லை, ஒக்கந்தேயாயக் கிராம எல்லை; மேற்கு-ஒக்கந்தேயாயக் கிராம எல்லை, தளாவக் கிராம எல்லை.

கவனிப்பு.—மேற்சொல்லிய எல்லைகளுக்குட்பட்டதாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டு, இவ்வறிவித்தலில் நின்று நீக்கப்பட்டிருக்கின்றதென்பதையும், அதின் விசாலத்தொகையாகும் 7 ஏக்கர் 3 றூட்டு 18 பேட்சம் முன்குறித்த 306 ஏக்கர் 6 பேட்சுக்குள் அடங்கவில்லையென்பதையும் கவனிக்கவேண்டியது :—

பிரதமபடம் 405.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. பே. |
|---|---|---|
| 4 .. | கெற்றகெலேககவத்தை, பெலவத்தை, கனத்தேவத்தை, கொடெல்லேவத்தை, அத்மகேவத்தை, போககவத்தை .. .. .. | 7 3 18 |

* இங்கிலீசிண் நான்காம் பாகம் 38 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

[Hambantota S. O. 5—1911.]

---

[Kurunegala Notice No. 3,967.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1911 ம் ஆம் (ஜனவரி) தைமீ 20 ம் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்புக் கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டான அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக்கு தம்பதேனிகாத்பத்தில் மாயுருவதிக் கோறளையைச்சேர்ந்த கங்கொட என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனணைக்கப்படும் *பட்ப்பிரதியில் விவரித்தபடியே 1 றூட்டு 24 பேட்சு விசாலமுடையதும் சாமானியமாய் ரேரட்டு என்னும் பெயரினல் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டுவருவதும் 948 ம் பிரதமபடத்தில் 3 ங் துண்டாய்க் காட்டப்பட்டதுமான காணி; இதற்கெல்லைகளாவன: வடக்கு-வெவகமக் கிராம எல்லை; கிழக்கு-சிங்கலியபேடிதுறயலாகே கிறியாவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் கொகொம்பககவத்தை, தெவுனுகல்பேடிகே சாளியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் அம்பலமகாவகொட்டுவெ, அகுறங்பேடிலாகே கபுகே உரித்துப்பேசும் கொகொம்பககேனே, சிங்கலியபேடிதுறயாலாகே மனிக்காவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் அம்பலமகாவகேனே; தெற்கு-பாலாய, மெனிக்க, கப்பு, கிறியாவும் கனுவும் உரித்துப்பேசும் கட்டுஅவெல், சிங்கலியதுறயாலகே மெனிக்காவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் அம்பலமகாவகேனே; மேற்கு-தெவுனுகல்பேடிகே சாளியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் அம்பலமகாவகொட்டுவெ, சிங்கலியபேடிதுறயாலாகே கிறியா உரித்துப்பேசும் ஓயகாவவத்தேகேனே, சிங்கலியபேடிதுறயாலாகே மனிக்காவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் வெவபில்லெவேவத்தை.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 39 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Kurunegala S. O. 7—1911.]

---

[Kurunegala Notice No. 3,968.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1911 ம் ஞூ (ஜனவரி) தைமீ 20 ங் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையில் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக்கு தம்பதெனிகத்பத்துவைச்சேர்ந்த மயுராவதிகோறளையிலிருக்கும் இரகெடிகும்புற என்னுங் கிராமத்திலுள்ள இத்துட னணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே 1 ஏக்கர் 1 றூட்டு 7 பேட்சு விசாலமுடையதும் சாமானியமாய் ரேரட்டு என்னும் பெயரினல் அழைக்கப்பட்டு அறியப்பட்டு வருவதும் 926 ம் பிரதமபடத்தில் 19 ங் துண்டாய்க் காட்டப்பட்டதுமான காணி; இதற் கெல்லைகளாவன: வடக்கு-கலகிடியாவ என்னுங் கிராம எல்லை; கிழக்கு-கொகொம்பாவிலிருக்கும் பீ. டீ. கொறதலா உருத்தாடும் குருந்தவன, அதுகல் பீ. டீ. கொறதலா உருத்தாடும் ககடககமுலவத்த, ராஜபக்ஸ பீ. டீ. மெனிக்கா உருத்தாடும் கோன்ககமுலவத்த, ராஜபக்ஸ பீ. டீ. லபுனு உருத்தாடும் மீககமுளவத்த. ராஜபக்ஸ பீ. டீ. பிரியா உருத்தாடும் ககடககமுளவத்த, ராஜபக்ஸ பீ. டீ. பெத்தாவும் இன்னுமொருவரும் உருத்தாடும் புலுககமுளவத்த, ராஜபக்ஸ பீ. டீ. பெத்தாவும் மற்றவர்களும் உருத்தாடும் ககடககமுளவத்த, வெல்பள்ள என்னுங் கிராமத்தினெல்லை; தெற்கு-ராஜபக்ஸ பீ. டீ. பெத்தாவும் மற்றவர்களும் உருத்தாடும் ககடககமுளவத்த; மேற்கு-ராஜபக்ஸ பீ. டீ. பெத்தாவும் மற்றவர்களும் உருத்தாடும் புளுககமுளவத்த, ராஜபக்ஸ பீ. டீ. கிரியா உருத்தாடும் ககடககமுளவத்த, ராஜபக்ஸ பீ. டீ. லபுனு உருத்தாடும் மீககமுளவத்த, அதுகல் பீ. டீ. டிங்காவும் மற்றவர்களும் உருத்தாடும் ககடககமுளவத்த, அதுகல் பீ. டீ. டிங்காவும் மற்றவர்களும் உருத்தாடும் போககமுளவன, அதுகல் பீ. டீ. டிங்கா உருத்தாடும் வடகொடுவேதெனிய, கொறதலா பீ. டீ. கொககாம்பா உருத்தாடும் குறுந்தவன.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 40 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Kurunegala S. O. 8—1911.]

---

[Tender for provisioning Hospitals, Batticaloa, Kalmunai, &c.]

கீழ்சொல்லப்பட்ட ஆசுப்பத்திரிகளுக்கு 1911 ம் ஆண்டு ஆடிமீ 1 ங் திகதி துவக்கம் 1912 ம் ஆண்டு ஆனிமீ 30 ங் திகதி வரைக்கும் தேவையான சாப்பாட்டுச் சாமான்களைக் கொந்திருத்து ஒப்பந்தம்செய்ய விருப்பமுள்ளவர்கள் வெவ்வேறு ஒப்பந்தக் கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேள்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்,

4. கேள்விக்கடதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடது கை மேல்மூலையிற் "ஆசுப்பத்திரிக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1911 ம் ஞூ தைமீ 31 ங் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல் வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச்செய்யத் தவறினல் கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் முற்பணம் கீள்சொல்லப்பட்டபடி கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதின்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத் தவறினல், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய் விடும். அப்படி கட்டப்பட்ட கொந்திருத்துக்காரனின் பேர் கவண்மேந்தில் யாதொரு கொந்திருத்தும் எடுக்க ஏலாமல் அரசாட்சியாரின் பத்திரிகையில் (Defaulting List) போடப்படும். கொந்திருத்து ஒப்பந்தந் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்கவேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பணப்பிணையில் கீழ் சொல்லப்பட்டபடி கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம்வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில்மெடிக்கல் ஆபீசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

9. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

10. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவண்மேந்தாருக் குண்டு.

11. இன்னும் தேவையான விவரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) சீ. றீ. கிறிவ்வின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1911 ம் ஆண்டு தைமீ 10 ந் உ.

| ஆசுபத்திரியின் பெயர். | சாப்பாட்டுச்சாமானின் வகை. | முற்பணத்தின் தொகை. ரூ. | ச. | பிணையின் தொகை. ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| மட்டைக்கலப்பு | சமைத்த சாப்பாடு பாலுடன் | 100 | 0 | 200 | 0 |
| கல்முனை | ஷை | 200 | 0 | 400 | 0 |
| மகாஓயா | ஷை | 50 | 0 | 100 | 0 |
| திருக்கிணாமலை | ஷை | 100 | 0 | 200 | 0 |
| சிலாவம் | ஷை | 100 | 0 | 200 | 0 |
| தண்டுகமுவ | ஷை | 100 | 0 | 200 | 0 |
| குருணாக்கல் | ஷை | 500 | 0 | 1,000 | 0 |
| மாருவில | ஷை | 200 | 0 | 400 | 0 |
| நிக்காவரட்டி | ஷை | 100 | 0 | 200 | 0 |
| புத்தளம் | ஷை | 200 | 0 | 400 | 0 |
| அனுராசபுரம் | ஷை | 200 | 0 | 400 | 0 |
| அலுத்நுவர | பச்சைப்படி பாலுடன் | 100 | 0 | 200 | 0 |
| பதுல | சமைத்த சாப்பாடு பாலுடன் அல்லது இல்லாமல் | 300 | 0 | 600 | 0 |
| புத்தல | சமைத்த சாப்பாடு பாலுடன் | 200 | 0 | 400 | 0 |
| மெடகம | ஷை | 125 | 0 | 250 | 0 |
| கேகல்ல | ஷை | 200 | 0 | 400 | 0 |
| கொலன்னா | ஷை | 200 | 0 | 400 | 0 |
| ரட்னபுரி | ஷை | 200 | 0 | 400 | 0 |

[Tender for provisioning Hospitals, Jaffna, Mannar, &c.]

கீழ்சொல்லப்பட்ட ஆசுபத்திரிகளுக்கு 1911 ம் ஆண்டு ஆடிமீ 1 ந் திகதி துவக்கம் 1912 ம் ஆண்டு ஆனிமீ 30 ந் திகதி வரைக்கும் தேவையான சாப்பாட்டுச் சாமான்களைக் கொந்திருத்து ஒப்பந்தம்செய்ய விருப்பமுள்ளவர்கள் வெவ்வேறு ஒப்பந்தக் கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேள்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத் தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல்வேண்டும்.

3. ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடது கை மேல்மூலையில் "ஆசுபத்திரிக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1911 வருஷம் மாசிமீ 7 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்பவேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருககும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் முற்பணம் கீழ்சொல்லப்பட்டபடி கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்க பிணை கொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். அப்படி கட்டப்பட்ட கொந்திருத்துக்காரனின்பேர் கவண்மேந்தில் யாதொரு கொந்திருத்தும் எடுக்க ஏலாமல் அரசாட்சியாரின் பத்திரிகையில் (Detaulting List) போடப்படும். கொந்திருத்து ஒப்பந்தந் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்தன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்கவேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பணப்பிணையில் கீழ் சொல்லப்பட்டபடி கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம்வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

9. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

10. ஒப்பந்தக்கேள்விக்ளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவண்மேந்தாருக் குண்டு.

11. இன்னும் தேவையான விவரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) சீ. தீ. கிறிவ்வின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1911 ம் ஆண்டு தைமீ 17 ந் உ.

அட்டவணை.

| ஆசுபத்திரியின் பெயர். | சாப்பாட்டுச்சாமானின் வகை | முற்பணத்தொகை. ரூ. | ச. | பிணையின் தொகை. ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் ஆசுப்பத்திரி | சமைத்த சாப்பாடு பாலுடன் | 200 | 0 | 400 | 0 |
| மன்னார் ஷெ | ஷெ | 100 | 0 | 200 | 0 |
| மான்தொட்டை ஆசுப்பத்திரி | ஷெ | 100 | 0 | 200 | 0 |
| மூல்லைத்தீவு ஆசுப்பத்திரி | ஷெ | 100 | 0 | 200 | 0 |
| பரித்தித்துறை ஷெ (Point Pedro) | ஷெ | 100 | 0 | 200 | 0 |
| வவுனியா ஷெ | ஷெ | 100 | 0 | 200 | 0 |
| பலபிட்டி ஷெ | ஷெ | 100 | 0 | 200 | 0 |
| காலி ஆசுப்பத்திரி | சமைத்த சாப்பாடு பாலுடன் அல்லது இல்லாமல் | 400 | 0 | 800 | 0 |
| அம்பான்தொட்டை ஆசுப்பத்திரி | சமைத்த சாப்பாடு பாலுடன் | 100 | 0 | 200 | 0 |
| மாத்தறை ஆசுப்பத்திரி | ஷெ | 200 | 0 | 400 | 0 |
| தங்கல ஆசுப்பத்திரி | ஷெ | 100 | 0 | 200 | 0 |

---

[Supreme Court Criminal Sessions at Jaffna.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிரீங்கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங்கோட்டாரால் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1911 ம் ஆண்டு மாசிமாதம் 13 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,

வீ. தம்பிப்பிள்ளை,
பிஸ்காலுக்காக.

யாழ்ப்பாணம் பிஸ்கால் கந்தோர்,
1911 ம் ௵ தைமீ 16 ந் உ.

---

## UNOFFICIAL ANNOUNCEMENTS.

### தொழிலுக்குட்படாதவர்களின் அறிவித்தல்.

[K. J. Perera]

அலுற்கூறு கோறளையைச்சேர்ந்த ருகமபத்துவிலுள்ள தேலதுறே ஜாஎல கிராமத்தில் வசிக்கும் கே. ஜே பெரேரா ஆகிய நான் 1907 ம் ௵ முதலாம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் I B என்னும் செடீலில் இரண்டாம் விதிப்படி தங்கல்லகே பிரிவில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிசு ஆக வேலைப்பார்ப்பதற்கு என்றும் கொள்ளப்படவும் பதிவுசெய்யப்படவும் இன்றுமுதல் மூன்று மாசத்தின்பின் பதிவு கந்தோர்தலைவரிடம் உத்தரவுகேட்பேனென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

கே. ஜே. பெரேரா.

தேலதுறே ஜாஎல.
1911 ம் ௵ ஜனவரிமீ 6 ந் உ.

---

[O. Simon P. Jayasinghe.]

அலுற்கூறு கோறளையைச்சேர்ந்த ருகம்பத்துவ வெல்லம்பிட்டியவிலிருக்கும் ஒ. சய்மன் பீ. ஜயசிங்க ஆகிய என்னை 1907 ம் ஆண்டு முதலாம் இலக்கச் சட்டத்தின் 1B என்னும் செடீலின் இரண்டாம் விதிப்படி பதுள்ளை டிஸ்திறிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிசாக வேலைபார்ப்பதற்கு நியமிக்கும்படி சங்கைபோந்த றெஜிஸ்திரார் ஜெனறல் அவர்களிடம் இன்று முதல் மூன்று மாசம் சென்றதின்பின் உத்தரவு கேட்பேனென்று இத்தால் அறிவித்தல் செய்கிறேன்.

கொழும்பு, 1911 ம் ஆண்டு ஜெனவரிமீ 16 ந் உ.

ஒ. சயிமன் பீ. ஜயசிங்க.

---